2. தகவல் கோரல்.

அ) கல்லூரிகளில் தற்காலிகமாக ஆசிரியர்களை நியமிப்பது குறித்

திரு. வி. பி. சிந்தன் : தலைவர் அவர்களே, 1985 ஆம் ஆண்டு டெல்லி உச்ச நீதி மன்றத்தினுடைய நீதிபதி வெங்கட்ட ராமையா அவர்கள் கல்வித்துறையில் காண்ட்ராக்ட் முறையிலே ஆசிரியர்களை நியமிக்கக்கூடாது என்று தீர்ப்பு கூறியதற்கு பிறகும் தமிழகத்திலே அரசு கல்லூரிகளில் காண்ட்ராக்ட் முறையிலே ஆசிரியர்களை நியமிப்பதும் 9 மாத காலம் என்று தொழிற்சாலைகளிலே காண்ட்ராக்ட் தொழிலாளர்களை வேலைக்கு வைப்பதுபோல நியமிப்பதும் இப்போது இந்த கோடை விடுமுறையோடு அவர்களை வேலையை விட்டு நீக்கவேண்டும் என்ற உத்திரவை பிறப்பிப்பதும் ஒரு சிக்கலான பிரச்சனை என்பதை உங்களுடைய கவனத்திற்கு கொண்டு வந்து, அரசு தரப்பில் (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அமைச்சரிடம் கேட்டுத் தெரிந்து சொள்ளலாம்.

(ஆ) மாற்றியமைக்கப்பட்ட சொத்துவரி அமுல் செய்வது குறித்து.

திரு. செ. செம்மலை: தலைவர் அவர்களே, ஒரு முக்கியமான பிரச்சனை. உள்ளாட்சி அமைப்புகளுக்கு தேர்தல் நடத்திப்பட்ட பிறகு நகராட்சிகளில் புதிதாக பொறுப்புக்கு வந்தவர்கள் தங்களுக்கு நிதியாதாரங்களை அதிகரித்துத்தரவேண்டும் என்று அரசுக்கு வேண்டுகோளை வைத்துவிட்டு நிதி ஆதாரங்களைப் பெறுவதற்கான ஆணையையும் பெற்றுவிட்டு அப்படி வருகின்ற தொகையை தாங்களே செலவு செய்து கொள்ளுகின்ற வகையில் அரசாங்கத்திற்கு அதிலே ஒரு பகுதியைக்கூட கொடுக்காமல் இருக்கின்ற நிலைமையில் பயனைப் பெற்றுக்கொண்டு அரசாங்கத்தின் மீது அரசுதான் வரியை உயர்த்திவிட்டது என்ற பழியை போட்டுவிட்டு மக்களிடையே ஒரு குழப்பத்தை ஏற்படுத்துகின்ற சூழ்நிலையை அரசினுடைய கவனத்திற்கு நான் இப்போது கொண்டு வருவதோடு அதுகுறித்து அரசினுடைய நிலை என்ன, என்ன முடிவை அரசாங்கம் எடுக்க இருக்கிறது என்பதை உங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒருவர் கேட்டதற்கு பிறகு இன்னொருவர் கேட்க வேண்டாம்.

*மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்; தலைவர் அவர்களே, கடந்த பல்லாண்டுகளாக சொத்துவரி திருத்தப்படவில்லை. கடந்த ஆண்டு அரசு ஆணையிட்டு தனி அதிகாரிகளை நியமித்து சொத்துவரி திருத்தப்பட வேண்டும் என்று விரும்பியது அப்படி திருத்தப்பட்ட சொத்துவரி இன்று முதல் (1·4-1987) முதல் அமுலுக்கு வருவதாக ஆணையிட்டது. அவர்களும் அதற்கான ஆவணங்களை எல்லாம் தயாரித்தார்கள். ஆனால்

இதற்கிடையில் இப்போது தேர்ந்தெடுக்கப்பட்ட நகராட்சி மன்றங்கள் பேரூராட்சிகள், ஊராட்சி மன்றங்கள் வந்து விட்டன. இருக்கின்ற நடை முறைகளின்படியும், சட்டத்தின் படியும் வரிவிதிப்பு அதிகாரம் மீண்டும் நகராட்சி மன்றங்களுக்கும், ஊராட்சி ஒன்றியங்களுக்கும், ஊராட்சி மன்றங்களுக்கும் தரப்பட வேண்டும் என்பதும் ஏற்கனவே அரசு ஆணையின்படி மாற்றியமைக்கப்பட்ட சொத்து வரியை அமுல் செய்யவேண்டாம் என்றும் 1-4-1987 முதல் அமுல் செய்யக்கூடாது என்றும், அந்த ஆணையை திரும்ப பெறவேண்டும் என்றும் (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் நேற்றையதினம் உத்திரவு இட்டிருக்கிறார்கள் என்கின்ற மகிழ்ச்சியான செய்தியை நான் இந்த மன்றத்திற்குத் தெரிவித்துக் கொள்கிறேன். ஊராட்சி மன்றங்கள், பேரூராட்சி மன்றங்கள் நகராட்சி மன்றங்கள், அவர்களுக்குரிய அதிகாரத்தின் கீழ் நிதி வருவாயைத் தேடிக்கொள்ள வேண்டும். பற்றாக்குறை ஏற்படுமானால், அரசினிடத்திலே அவர்கள் வருகிறபோது எந்த அளவுக்கு நிதி ஆதாரங்களைத் திரட்டியிருக்கிறார்கள், எவ்வாறு நிதியைச் செலவழித்து இருக்கிறார்கள், எவ்வாறு நிர்வாகம் செய்து இருக்கிறார்கள் என்று, எப்படி மத்திய அரசு மாநில அரசைக்கேட்டு, கடனும், மானியமும் தருகிறதோ அதே போல் உள்ளாட்சி மன்றங்களுக்கும் இந்த அரசு வழங்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(இ) 'முட்டாள்கள் தினம்' என்பதால் எழுப்பப்பட்டவை.

திரு. கி. மனோகரன்: * *

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீக்கியாகிவிட்டது. நீங்கள் எதைச்சொல்லப் போகிறீர்கள் என்று தெரியும். (குறுக்கீடு). முட்டாள்கள் தினம் சம்பந்தப்பட்ட விவாதங்கள் எல்லாமே நீக்கப்படுகின்றன. (குறுக்கீடு) நீக்கப்பட்டு விட்டது.

(ஈ) சட்டமன்ற உறுப்பினர்கள் விடுதியில் தண்ணீர் வசதி.

திரு. பொ. உத்திராபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர்களுடைய விடுதிகளில் மூன்று முறையாக தண்ணீர் வழங்கப்படும் என்று ஒரு சுற்றறிக்கை வந்துள்ளது. சட்டமன்ற உறுப்பினர்கள் விடுதிகளில் காலை, மத்தியானம், சாயந்திரம் மூன்று தடவை தண்ணீர் கிடைப்பதாக அறிவிக்கப்பட்டது ஒரு வார காலமாக, காலை 10 மணிக்குப் பிறகு மறுநாள் காலை 6 மணிக்குத் தான் தண்ணீர் வருகிறது. இன்றைக்கு 8 மணிக்கே எல்லா விடுதிகளிலும் தண்ணீர் நின்று விட்டது. பாதி குளித்தும், குளிக்காமலும் வந்து இருக்கிறோமே, உடனடியாக தண்ணீர் கிடைப்பதற்கு ஆவன செய்யப்படுமா? அல்லது குளிக்காமலேயே சட்டமன்ற உறுப்பினர்கள் சட்டமன்றத்திற்கு வருவதா என்று அமைச்சர் அவர்கள் சொல்லவேண்டும். (குறுக்கீடுகள்.)

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உறுப்பினர்கள் எல்லாம் குளிப்பதற்கு தண்ணீர் கொடுக்கும்படி உத்தரவிடுகிறேன்.

(உ) திரு. குமரி அனந்தன் இந்திரா காங்கிரசில் சேர்ந்ததாக சொல்லப்படுவது குறித்து.

திரு. ஆ. மலர்மன்னன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டு நாட்களுக்கு முன்னால், முன் வரிசையிலே இருக்கின்ற மாண்புமிகு உறுப்பினர் திரு குமரி அனந்தன் அவர்கள் இந்திரா காங்கிரசில் இணைந்து விட்டார்கள் என்று எல்லா பத்திரிகைகளிலும் செய்தி வந்திருக்கிறது. ஆனால் இங்கே உங்களுடைய மேலான கவனத்திற்கு அது வந்திருக்கிறதா? இன்னும் அவர் முன் வரிசையிலே இருக்கிறாரே, அவர் இந்திரா காங்கிரசில் சேர்ந்துவிட்டார்.....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எனக்கு இன்னமும் தகவல் வரவில்லை. (குறுக்கீடு) அவ்வளவுதான். (குறுக்கீடு) என்ன செய்யச் சொல்கிறீர்கள்?

திரு. அ. மலர்மன்னன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதே நிலைமை மற்றவர்களுக்கு இருக்குமேயானால் (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது அல்ல. எனக்கு எழுத்து மூலமாக அவர் எழுதி அனுப்பவில்லை. (குறுக்கீடு)

(ஆ) மாற்றியமைக்கப்பட்ட சொத்துவரி அமுல் செய்வது குறித்து—தொடர்ச்சி.

திரு. ஏ. எஸ். ஏ. ஆறுமுகம், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் இந்த ரிவிஷன் மூலமாகப் போட்ட வரிகளை எல்லாம் நீக்கியிருப்பதாக சொல்வது ஏப்ரல்/செய்தியா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே மாண்புமிகு திரு ஆறுமுகம் அவர்களுக்கு இப்படியெல்லாம் சந்தேகம் வரும் என்று தான் நேற்றையதினமே புரட்சித் தலைவர் அவர்கள் அந்த உத்தரவை வழங்கினார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது முடிந்தது.

(ஊ) காஞ்சி ஏகாம்பரேஸ்வரர் திருக்கோயில் வண்ணப்பூச்சிகளின் மீது சுண்ணாம்பு பூசுவதாக கூறப்படுவது குறித்து.